**பக்கம்.**

**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.4/2016**

**வா.சா. –1(சுரேஷ்)**

**நாள். 22.08.2025.**

**வா.சா.1 இன்று ஆஜர். சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் 5ம் வாதி . 1ம் வாதி ராஜன்னா எனது தந்தை . தாவா சொத்தும் இதர சொத்துக்களும் ஆதியில் கருப்பண்ண கவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். கருப்பண்ண கவுண்டருக்கு அழகியண்ண கவுண்டர், ஆறுமுக கவுண்டர் என 2 வாரிசுகள் என்றால் சரிதான். கருப்பண கவுண்டர் தன்னுடைய 2 வாரிசுகளையும் விட்டு விட்டு நீண்ட நாட்களுக்கு முன்னர் இறந்து விட்டார் என்றால் சரிதான். கருப்பண கவுண்டர் காலத்திற்கு பிறகு அவரின் ஆண் வாரிசுகள் தமது மக்களை கட்டுப்படுத்தி கடந்த 07.12.1976ல் பதிவு பாகப்பிரிவினை பத்திரம் மூலம் பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினையில் தாவா பிராது சொத்து பட்டா எண். 1168 சர்வேஎண். 446/1ல் ஆறுமுக கவுண்டரின் வாரிசுக்கு 16.81 ஏக்கர் நிலம் கிடைத்தது என்றால் சரிதான். ஆறுமுக கவுண்டருக்கு 2 மனைவிகள் என்றால் சரிதான். மூத்த மனைவி நல்லம்மாள், இரண்டாவது மீனாட்சி அம்மாள் ஆவார்கள். மூத்த மனைவி நல்லம்மாளுக்கு நாச்சம்மாள், முத்துச்சாமி, பெரியம்மாள், முத்தம்மாள் என்ற வாரிசுகள் உள்ளார்கள் என்றால் சரிதான். 2வது மனைவி மீனாட்சி அம்மாளுக்கு ராஜண்ணா, பழனியம்மாள், கருப்பாயி என்ற கலையரசி என்ற வாரிசுகள் உள்ளார்கள் என்றால் சரிதான். 2ம் வாதியின் வாரிசுகள் 4 முதல் 7 பிரதிவாதிகள் என்றால் சரிதான். 3ம் வாதியின் வாரிசுகள் 6 முதல் 8 வாதிகள் என்றால் சரிதான். 4ம் வாதியின் வாரிசுகள் 9 முதல் 11 வாதிகள் என்றால் சரிதான். 1ம்வாதியின் வாரிசு நான் , ஐந்தாம் வாதி என்றால் சரிதான். ஆறுமுக கவுண்டரின் காலத்திற்கு முன்பே அவரது இரண்டு மனைவிகளும் இறந்து விட்டார்கள் என்றால் சரிதான். ஆறுமுக கவுண்டர் 22.11.2011ல் இறந்து விட்டார் என்றால் சரிதான். அவர் இறக்கும் போது சுமார் 90 வயது இருக்கும். ஆறுமுக கவுண்டரின் காலத்திற்கு பின்பு அவருக்கு சொந்தமான சொத்தை யார், யார் அனுபவித்து வந்தார்கள் என்றால் ராஜன்னா, முத்துச்சாமி ஆகியோரின் ஆண்வாரிசுகள் மட்டும் கூட்டாக அனுபவித்து வந்தார்கள். ஆறுமுக கவுண்டர் இறப்பதற்கு முன்பு தாவா சொத்து சம்மந்தமாக ஆவணம் எதுவும் எழுதி வைக்கவில்லை. ஆறுமுக கவுண்டர் இறந்த பின்பு நானும் 1,2 பிரதிவாதிகளும் கூட்டாக அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். தாவா பிராது சொத்தில் 1ம் பிரதிவாதி முத்துச்சாமிக்கு 1 பங்கு இருக்கிறது என்றால் சரிதான். நானும்

2ம்பிரதிவாதியும் சேர்ந்து 1ம் பிரதிவாதிக்கு பாகம் பிரித்து கொடுக்க கடமைப்பட்டுள்ளோம் என்றால் சரிதான். ஆறுமுக கவுண்டர் உயிருடன் இருக்கும் வரை 1ம் பிரதிவாதி அவ்வப்போது வந்து ஆறுமுக கவுண்டருக்கு உரிய சவரட்சனைகள் செய்து வந்தார் என்றால் சரிதான். பராமரித்து வந்தார் என்றால் சரிதான். நான் 1ம் பிரதிவாதியிடம் சென்று பாகம் பிரித்து கொடுக்கும்படி கேட்டதில்லை. ஆறுமுகவுண்டரின் 1வது மனைவிக்கு பிறந்த முத்துச்சாமி தான் 1ம் பிரதிவாதி என்றால் சரிதான்.

மறுவிசாரணை – இல்லை.

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P VELMURUGAN
Digitally signed by P VELMURUGAN
Date: 2025.08.22 19:34:05 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.